Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

பதிவு அஞ்சல் மூலம்

நகர் ஊரமைப்புத் துறை

அனுப்புநர்

திருமதி.பு.கவிதா, B.E., M.Plan.,
துணை இயக்குநர்/ உதவி இயக்குநர்(பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருவள்ளூர் மாவட்டம்,
எண்.43/397A, இரண்டாம் தளம்,
அன்னை இந்திரா காந்தி சாலை,
இராஜாஜிபுரம் பகுதி – II,
திருவள்ளூர் - 602 001.
தொலைபேசி - 044-29595440.
email-dtcptiruvallur@gmail.com

பெறுநர்

செயல் அலுவலர்,
பள்ளிப்பட்டு பேரூராட்சி,
திருவள்ளூர் மாவட்டம்.

ந.க.எண்.1919/2021/ திருவள்ளூர்-2 நாள்.15.03.2022.

அய்யா,

பொருள். மனைப்பிரிவு - திருவள்ளூர் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம் - திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், பள்ளிப்பட்டு பேரூராட்சி, தளவாய்பட்டடை கிராமம் ச.எண்.120/2A, 2B, 3A, 3B, மற்றும் 120/3C-ல் 1.84 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில் நுட்ப அனுமதி வழங்குதல் - குறித்து.

பார்வை:

1. மனுதாரர்கள். திரு.N.சுதாகர், திருமதி.N.சபிதா, திருமதி.N.கவிதா ஆகியோர் விண்ணப்பம் நாள்.12.07.2021 மற்றும் இணையதள விண்ணப்பம் எண்.202106401013606, நாள்.08.07.2021.
2. இவ்வலுவலகக் கடிதம், இதே எண், நாள்.21.02.2022 (சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் உள்ளாட்சிக்கு ஒப்படைக்க கோரியது).
3. நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம். ந.க.எண்.19799/2020/போ, நாள்.24.12.2020.
4. மனுதாரர், திருமதி.N.கவிதா மற்றும் இருவர், அவர்களின் கடிதம் நாள்.08.02.2022 (தானப்பத்திர எண்.188/2022, நாள்.04.02.2022)
5. அரசாணை எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள்.04.06.2004.
6. அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள்.04.05.2017.
7. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.31.01.2020.
8. அரசாணை எண்.141, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை UD4(3) நாள்.23.09.2020.
9. அரசாணை எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை UD4(1) நாள்.09.12.2020
10. அரசு கடிதம் எண்.19113/நவ4(3)/2017-1 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை. நாள்.30.08.2017,
11. நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.13686/2017/LA1, நாள்.08.09.2017.
12. மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் மாவட்டம், அவர்களின் கடித R.Dis.4597/2018/N2. நாள்.12.12.2019, R.Dis.4598/2018/N2,

நாள்.12.12.2019 மற்றும் R.Dis.4600/2018/N2, நாள்.12.12.2019.

13. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண். மூ.மு. எண்.24354/2019/LA/TCP-7, நாள்.09.06.2021.
14. செயற்பொறியாளர்(பொ.ப.து) கொசஸ்தலையாறு, வடிநிலகோட்டம் நீ.ஆ.து.திருவள்ளூர் அவர்களின் கடித எண்.வபி/இவஅ2/ கோ.40/308m/2021/நாள்.12.08.2021.
15. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12544/2014,சிபி, நாள்.04.07.2014.
16. அரசாணை (நிலை) எண்.166, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.29.11.2018. (Insisting TNRERA Registration)
17. சார்பதிவாளர், பள்ளிப்பட்டு சார்பதிவு அலுவலகம், அவர்களின் கடிதம் எண்.36/2022, நாள்.15.02.2022.

*****

உத்தரவு :

பார்வை 1-ல் சுட்டிய மனுதாரர் கடிதத்துடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதலுக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டும், பார்வை 14-ல் கண்ட நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் கடிதத்தின்படியும், திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், பள்ளிப்பட்டு பேரூராட்சி, தளவாய்பட்டடை கிராமம் ச.எண்.120/2A, 2B, 3A, 3B, மற்றும் 120/3C-ல் 1.84 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை 3-ல் சுட்டிய இவ்வலுவலக கடிதம் **நாள்.24.09.2021-ன்** மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டது. பார்வை 5-ல் சுட்டிய மனுதாரர் கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சியிடம் தானமாக **தானப்பத்திர எண்.188/2022, நாள்.04.02.2022**-ல் ஒப்படைக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2. மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ./மா.ந.ஊ.உ.இ.(திருவள்ளூர்)எண்.27/2022** என எண்ணிடப்பட்டு **3** அசல் வரைபடங்கள் மற்றும் அசல் தானப்பத்திரம் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பிவைக்கப்படுகிறது.

3. மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும் போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.9(ஆ)-ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத் துறைக்கும், தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

5. செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகைச்சான்றினை உடன் அனுப்பிவைக்குமாறும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

சிறப்பு நிபந்தனைகள்:

1. பார்வை 10-ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 8-ல் கண்ட TNCDBR – 2019 விதி எண்.47 (11)-ன்படியும் மாநகராட்சி / நகராட்சி அல்லாத பகுதிகளில் " Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along with the permit

of local body to the applicants directly, only after ensuring that the applicant lays tar roads, provide other amenitites like storm water drains, water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc, as per the standards specified by the Local Body.

2. பார்வை 11 மற்றும் 12-ல் கண்ட அரசு கடித மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்

3. "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated:22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development Act 2016). The promoter has to advertise, market, book, sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority"-ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4. பார்வை 16-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12544/2014/சிபி. நாள்.04.07.2014 சிறப்பு நிபந்தனையில், நகர் ஊரமைப்புத் துறை சட்டப் பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களின் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பத்தாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

"சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால், அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல"

5. பார்வை 7-ல் கண்டுள்ள அரசாணையின்படி திட்டமில்லா பகுதியில் அமையும் மனைப்பிரிவிற்கு விதி எண்.3-ன்படி கூராய்வு கட்டணமாக ரூ.1000/-ஐயும் மற்றும் விதி எண்.9-ன்படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நிலப்பயன் மாற்றக் கட்டணமாகவும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் வசூல் செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

Head of Account

"0217 Urban Development 60 - Other Urban Development Schemes - 800 Other Receipts - AS Receipts Under Land Use Conversion Charges - 27 Non Taxation fees - 09 collections".
(DPC: 0217-60-800-AS-22709)

6. பார்வை 6 மற்றும் 8-ல் காணும் அரசாணைகளின்படி மனைகளுக்கான நன்னிலை வரி **ரூ.11,100/-(ரூபாய் பதினோறாயிரத்து நூறு மட்டும்)**, பரிசீலனை கட்டணம் **ரூ.11,300/-(ரூபாய் பதினோறாயிரத்து முந்நூறு மட்டும்)**, OSR கட்டணம் **ரூ.1,31,000/-(ரூபாய் ஒரு இலட்சத்து முப்பத்தி ஓராயிரம் மட்டும்), Display Board கட்டடணம் ரூ.1,500/-(ரூபாய். ஆயிரம் ஐநூறு மட்டும்)**பெறப்பட்டுள்ளது. மேலும் **கொடிநாள்** நிதியாக நன்னிலை வரி கட்டணத்தில் **20% தொகை ரூ.5,000/- (ரூபாய். ஐந்தாயிரம் மட்டும்) "Armed Force Flag Day Fund"** செலுத்தப்பட்டுள்ளது.

<u>இணைப்பு:</u>

வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்
3 தொகுப்பு மற்றும் அசல் தானப்பத்திரம்
(தானப்பத்திர எண்.188/2022, நாள்.04.02.2022)

16/3/22

துணை இயக்குநர்/ உதவி இயக்குநர்(பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருவள்ளூர் மாவட்டம்.

15.3.2022

<u>நகல்:</u>

1	வட்டாட்சியர், திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர்.	-	For incorporation in the Tamil Nilam and Collabland Software.
2	உதவி இயக்குநர், நில அளவை துறை, திருவள்ளூர் மாவட்டம். (சாலை மற்றும் பொது ஒதுக்கீட்டினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு.)	-	சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்கள் உட்பிரிவு செய்யும் பொருட்டும் மற்றும் For incorporation in the Tamil Nilam and Collabland Software.
3	Tamil Nadu Real Estate Regulatory Authority, No.1A, 1st Floor, CMDA Tower II, Gandhi - Irwin Bridge Road, Egmore, Chennai- 600 008.		
3	சார்பதிவாளர், **பள்ளிப்பட்டு** சார்பதிவாளர் அலுவலகம், திருவள்ளூர் மாவட்டம்	-	(ஊராட்சி மன்றத் தலைவர், **தளவாய்பட்டடை** ஊராட்சி மூலமாக)
4	மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவள்ளூர் மாவட்டம்.		
5	இருப்பு கோப்பு		(வரைபடம் -1 மற்றும் நிபந்தனைகள் படிவம் -1)
6	மனுதாரர் (பத்தி ஒன்று மட்டும்)	-	**திரு.N.சுதாகர், திருமதி.N.சபிதா, திருமதி.N.கவிதா** **பஜார் தெரு விரிவாக்கம்,** **பள்ளிப்பட்டு** வட்டம், திருவள்ளூர் மாவட்டம்.

247

பள்ளிப்பட்டு பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை : —திரு.சீ.ஹரிஹரகார்த்திகேயன்

ந.க.எண் 282 / 2021 அ1

நாள். 02.05.2022

பொருள் மனைப்பிரிவு – திருவள்ளூர் மாவட்டம் – பள்ளிப்பட்டு பேரூராட்சி குடியிருப்பு மனைப்பிரிவு - சர்வே எண். 120/2A, 2B, 3A, 3B மற்றும் 120/3C–ல் 1.84 ஏக்கர் பரப்பளவு கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது – உரிய கட்டணத் தொகையினை செலுத்தியதை தொடர்ந்து வரைப்பட ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

படிக்க
1) திரு. N.சுதாகர் நாயுடு, திருமதி. N.சபிதா மற்றும் திருமதி. N.கவிதா மூவர் அவர்களின் கடிதம் நாள் 12.07.2021
2) திருவள்ளூர் மாவட்டம், நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் கடிதம் ந.க. எண். 164/2020/திருவள்ளூர் 2 நாள் 05.11.2020.
3) மன்ற தலைவர், பள்ளிப்பட்டு பேரூராட்சி அவர்களின் முன்னனுமதி நாள் 02.05.2022
4) திரு. N.சுதாகர் நாயுடு, பள்ளிப்பட்டு அவர்களால் செயல் அலுவலருக்கு வழங்கப்பட்ட தானப்பத்திர எண். 188/2022 நாள் 04.02.2022
5) திருவள்ளூர் மாவட்டம், நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் தொழில்நுட்ப அனுமதி கடிதம் ந.க.எண். 164/2020/திருவள்ளூர் 2 நாள் 15.06.2021.
6) இப்பேரூராட்சி மன்ற தலைவர் தீர்மானம் எண் 33 நாள் 02.05.2022
7) தொடர்புடைய ஆவணங்கள்

– 0 –

உத்திரவு :-

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு பேரூராட்சிக்குட்பட்ட சர்வே எண். 120/2A, 2B, 3A, 3B மற்றும் 120/3C–ல் 1.84 ஏக்கர் பரப்பளவு கொண்ட மனைப்பிரிவிற்கு பார்வை 2ல் காணும் நகர் ஊரமைப்பு இயக்குநர், திருவள்ளூர் மாவட்டம் அவர்களின் கடிதம் 164/2020/திருவள்ளூர் 2 நாள் 15.03.2022ன்படி உத்தேச சாலை மற்றும் பூங்கா உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்க கடிதம் வரப்பெற்றது.

மேற்படி கடிதம் வரப்பெற்றதை தொடர்ந்து பார்வை 3ல் காணும் மன்ற தலைவர், பள்ளிப்பட்டு பேரூராட்சி அவர்களின் மன்ற முன்னனுமதியின் மூலம் சாலை மற்றும் பூங்காவினை தானப்பத்திரம் செய்து கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டது. அதனடிப்படையில் பார்வை 4ன்படி தானப்பத்திரம் பெறப்பட்டது. அதனை தொடர்ந்து பார்வை 5ல் காணும் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் செயலாணையின்படி மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவில் மொத்தமுள்ள 1.84 ஏக்கர் பள்ளிப்பட்டு பேரூராட்சி எல்லைக்குட்பட்ட மனைப்பிரிவிற்கு மட்டும் செலுத்தவேண்டிய கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளதால் கீழ்காணும்

நிபந்தனைகள்

- வரைப்படத்தில் காண்பிக்கப்பட்ட அளவுகள் கொண்ட மனைகளை வரையறை செய்தும நான்கு எல்லைகளுக்கு கற்கல் நட்டும் சாலைகளுக்குண்டான இடத்தை சீர் செய்து சாலைகள் அமைத்து தரப்பட வேண்டும் பொது உபயோகத்திற்கு விடப்பட்ட பூங்காவினை அளவு செய்து கற்கள் நடப்பட்டு கற்களுக்ளுக்கு மஞ்சள் வர்ணம் தீட்டப்பட்டு காண்பிக்கப்பட வேண்டும்.

- நகர் ஊரமைப்பு துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைப்படத்தின்படிதான் மனைகள் இருத்தல் வேண்டும்.

- மனைகளுக்கு நகர் ஊரமைப்பு துறையால் வழங்கப்பட்ட அளவுகளை மாற்றி அமைக்கவோ, உட்பிரிவு செய்யவோ கூடாது.

- இருசாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளில் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு அமைக்கப்பட வேண்டும்.

- மனைப்பிரிவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள காரணங்ளுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்றவற்றை குடியிருப்பு வீடுகள் கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

- மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியினை தெரு மட்டத்திற்கு மனைப்பிரிவு உரிமையாளரால் உயர்த்தி காண்பிக்கப்பட வேண்டும்.

- மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள சாலைகளின் இருபுறங்களும் மனைபிரிவு உரிமையாளரால் நிழல்தரும் மற்றும் பலன்தரும் மரங்கள் நடப்பட்டு பேரூராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட வேண்டும்.

- எந்த ஒரு மனையையும் வரைப்படத்தில் காண்பிக்கப்பட்ட அளவுகளுக்கு உட்பட்டுதான் விற்பனை செய்யப்பட வேண்டும்.

- மனைப்பிரிவு உரிமையாளர் எவ்வித முன் அனுமதியும் பெறாமல் மனைகளை உட்பிரிவு செய்தல் கூடாது அவ்வாறு செய்தல் தங்களுக்கு வழங்கப்பட்ட உத்திரவினை ரத்து செய்யப்படும்.

- அத்தோடு மனைப்பிரிவில் தேவையான பாலங்கள், மழைநீர் வடிகால்வாய், குடிநீர் பைப்லைன் மற்றும் தெருவிளக்கு ஆகிய வசதிகள் நிர்வாக கருத்திற்கேற்ப மனுதாரர் அமைத்து தர வேண்டும்.

- மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

- கடைக்கால் போடத் தேவையான அளவிற்கு அதிகமாக தரையை சமன்படுத்தவோ நிலசரிவை சரி செய்யவோ மனையிலிருந்து மண் தோண்டி எடுத்து பள்ளங்கள் குழிகள் ஏற்படுத்துதலோ கூடாது.

- மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கடைக்கான அல்லது கடைகளுக்கான மனையை வரைப்படத்தில் காட்டியுள்ளதுபோல் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

- மனையின் உள்ளே குறைந்த அழுத்த / உயர் அழுத்த மின் கம்பிப் பாதை / தந்திக்கம்பிப்பாதை அமைந்தால் கம்பிப்பாதையை சாலையின் விளிம்பிற்கே அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைப்படத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றியமைக்க வேண்டும்.

- இவ்வலுவலகத்தால் தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு வரைப்படத்தினை பொது மக்கள் பார்வைக்கு சம்மந்தப்பட்ட இடத்தில் 6 அடி X 4அடி என்ற அளவிற்கு குறையாமல் கான்கிரிட் பலகையில் வரைந்து வைக்கப்பட வேண்டும்.

- ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு மனைகள் வாங்கும் ஒவ்வொரு மனுதாரருக்கும் மனைப்பிரிவு வரைப்படம் நகல் வழங்கப்பட வேண்டும்.

- இம்மனைப்பிரிவு தொடர்பாக பின்னாளில் தணிக்கையில் ஏதேனும் தொகை இழப்பு சுட்டிகாட்டும் பட்சத்தில் அத்தொகையினை மனுதாரர் செலுத்த வேண்டும். தவறும்பட்சத்தில் இவ்வுத்திரவு ரத்து செய்யப்படும்.

- பேரூராட்சியாலும் அவ்வப்போது வழங்கப்படும் உத்திரவிற்கு கட்டுபட்டும் 1920 நகராட்சிகள் நிர்வாக சட்டத்திற்கும் உட்பட்டு மனைபிரிவு உரிமையாளர் நடத்தல் வேண்டும்.

பள்ளிப்பட்டு பேரூராட்சி அலுவலகம்
நாள்: 02/05/22
திருவள்ளூர் மாவட்டம்

2/5/22

செயல் அலுவலர்
பள்ளிப்பட்டு பேரூராட்சி
திருவள்ளூர் மாவட்டம்

பெறுநர்

திரு. N.சுதாகர் நாயுடு, மற்றும் இருவர்,
பள்ளிப்பட்டு.

நகல் – நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவள்ளூர் மண்டலம் அவர்களின் தகவலுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate